RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1937

OPEN ACCESS

# தமிழ் இலக்கியங்கள் கூறும் அறக்கோட்பாடுகளில் மனிதர்க்கு மனிதர் மாறுபடும் அறங்கள்

**இரா. கோகிலவாணி கார்த்திகேயன் [அ, *]**

[அ] தமிழியல் மற்றும் பண்பாட்டு புலம், தமிழ்நாடு திறந்தநிலைப் பல்கலைக்கழகம், சென்னை-600015, தமிழ்நாடு, இந்தியா

# The Virtues that vary from Human to Human Beings as noted in the Moral Principles of Tamil Literature

**R. Kohilavani Karthikeyan [a, *]**

[a] School of Tamil and Culture, Tamil Nadu Open University, Chennai-600015, Tamil Nadu, India

* Corresponding Author: kkkohila@yahoo.co.in

Received: 01-09-2022
Revised: 20-10-2022
Accepted: 27-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

The Tamil language is very ancient and pleasant. The development of a language depends on the quality, taste, and amount of literature produced in it. Thus, our Tamil language has a long pride not only in taste but also in number. Literature in Tamil started from the Sangam period, grew as the Sangam Dark period, increased as Epic literature, beautiful as Minor literature, flourished as Devotional literature, evolved as contemporary literature, and continues to grow day by day. There is no such thing as untold ideas in Tamil literature with such a long and long history. The Akanaanooru and Purananooru carry many messages about the Akam and Puram lives of the people. Along with the lives of the common people, the epic texts boast of the prosperous lives of the kings and their prowess. However, literature which is full of ethical ideas is still popular all over the world. The way of life of the Tamils has been defined as virtue, wealth, and happiness. Moral principles have always been intertwined in the lives of Tamils. Although some moral principles are common to all, some morals vary from human to human. The virtues of ordinary people do not apply to the king. The virtues of the man and the woman do not apply to the birth mother and the foster mother. The virtues of the warriors do not apply to the lover. Ascetic morality does not apply to the family man. In this way, morals also vary from person to person. Moreover, drinking toddy was natural during the Sangam age. But it became immoral at the time when Jainism and Buddhism began to proliferate. So is the eating of meat. Even today, there is a view of eating meat as an unethical practice. This review article is about how the virtues recorded in Tamil literature are different in Tamil life today.

**Keywords:** Akanaanooru, Virtues, Minor Literature, Epic literature

## முன்னுரை

தமிழர் பண்டைய காலத்தில் பெரு வாழ்வு வாழ்ந்து வந்தனர் என்பதையும், தமிழர்தான் உலகிற்கு பல வாழ்வியல் நெறிமுறைகளைத் தந்திருக்கின்றனர் என்பதையும் பல தொல்லியல் ஆய்வாளர்கள் சான்றுகளுடன் நிறுவி வருகின்றனர். செப்பேடுகள், கல்வெட்டுகள் என பல கிட்டினும், பல்வேறு காலக்கட்டங்களில் தோன்றிய இலக்கியங்களும் மக்களின் வாழ்வை எடுத்துக்கூறுவதில் பெரும்பங்கு வகித்து வருகின்றன (Puliyur Kesigen, 2014). தமிழர்களின் வாழ்வியலான, அன்பும், வீரமும் பதினெண்மேற்கணக்கு நூல்களில் பதிவு செய்யப்பட்டிருக்க, அதற்கு சற்றும் குறைவுபடாமல் பதினெண்

கீழ்க்கணக்கு நூல்களான திருக்குறள், நாலடியார், பழமொழி நானூறு, இன்னா நாற்பது, இனியவை நாற்பது ஆகியவற்றில் அறம் சார்ந்த கருத்துகள் மிகுந்த அளவில் இயற்றப்பட்டிருக்கின்றன. அது மட்டுமன்று, இரட்டைக்காப்பியங்களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் கூட அறக்கருத்துகளைத் தாங்கிய வண்ணம் உள்ளன.

## திருக்குறளில் காணப்படும் அறங்களின் மாறுபாடுகள்

அற இலக்கியம் என்னும் போதே நம் முன்னே வந்து தோன்றுவது திருக்குறள் என்னும் பொதுமறைதானே! அறத்துப்பால் என்னும் பால் வகையில் 38 அதிகாரங்கள் வைத்தவர். திருவள்ளுவர். இல்லறவியல், துறவறவியல் என்னும் இரு பிரிவுகளாக பிரித்து, துறவறத்தானுக்கு ஓர் அறமும், இல்லறத்தானுக்கு ஓர் அறமும் கூறுகிறார். 'அன்புடைமை' என்னும் அறத்தை இல்லறத்தானுக்கு வைத்தவர், 'அருளுடைமை' என்னும் அறத்தை துறவறத்தாருக்கு வைக்கிறார்.

மேலும் இல்லறத்தானுக்கான அறமாக விருந்தோம்பலை வைக்கின்றார்.

"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்

நல்விருந்து வானத் தவர்க்கு"

வீட்டுக்கு வந்த விருந்தினரைப் போற்றி அனுப்பி வைத்து விட்டு, வரப்போகும் விருந்தினரை எதிர்பார்த்திருப்பவர்களை, வானில் வாழும் தேவர்கள், தம் வீட்டுக்கு வரும் விருந்தினராக பார்ப்பராம் (Parimelzhagar, 2012).

அதேநேரம்,

"அருள்செல்வம் செல்வத்துள் செல்வம் பொருள்செல்வம்

பூரியார் கண்ணும் உள"

இது துறவறத்தாருக்கான அறம் என்கிறார் (Parimelzhagar, 2012). உலகில் அருட்செல்வம்தான் பெரிய செல்வம். மற்ற பொருட்செல்வம் எல்லாம் தீயோரிடத்தும் உள்ளது என்கிறார்.,

அதாவது விருந்தோம்பல் செய்வது இல்லற வாழ்வில் ஈடுபட்டிருக்கும் மனிதரின் இயல்பான கடமை. விருந்தினரை வரவேற்று உணவளிக்க, இல்லறத்தானுக்கு பொருட்செல்வம் என்பது மிகவும் இன்றியமை. ஆனால் துறவறம் பூண்டோருக்கு பொருட்செல்வத்தை விட அருட்செல்வமே தேவை. அதுவே அவருக்கான பெருஞ்செல்வம் ஆகும். இங்ஙனம் இருவேறு இயல்புடையோருக்கு இருவேறு அறங்களைக் கூறுகின்றது திருக்குறள்.

மேலும் கூடாநட்பு என்னும் அதிகாரத்தில்,

"பலநல்ல கற்றக் கடைத்தும் மனநல்லர்

ஆகுதல் மாணார்க்கு அரிது."

'பல நல்ல நூல்களைக் கற்றறிந்தாலும், நல்ல மனத்தினர் ஆதல் மாண்பில்லாதவர்க்கு அரிதான ஒன்று' கூறும் திருவள்ளுவர் (Parimelzhagar, 2012),

கல்லாமை என்னும் அதிகாரத்திலோ,

"யாதானும் நாடாமால் ஊராமால் என்ஒருவன்

சாந்துணையும் கல்லாத வாறு."

கற்றவனுக்கு எந்நாடும் நாடாம் எவவூரும் ஊராம் அப்படியிருக்க ஒருவன் இறக்கும் வரை கல்லாமல் இருப்பது ஏனோ? என்று கேட்கிறார் (Parimelzhagar, 2012). மனிதர்களுக்கு கல்வி என்பது எத்துணை உதவி செய்யும் என்று கூறும் அதேவேளை, என்ன கற்றாலும் மாண்பில்லாதோர் நல்லவர் ஆக இயலாது என்றும் கூறுகிறார். இங்கும் அறமானது மாறுபட்டு நிற்கின்றது.

## ‘நல்வழி’ நூலில் காணப்படும் அறங்களின் மாறுபாடுகள்

நல்வழி என்னும் நூல் ஔவையாரால் இயற்றப்பட்டது. தமிழ் கூறும் நல்லுலகம் நான்வகை ஔவையார்களை அறிந்திருக்கின்றது. அவர்களுள் அறநூல்கள் பலவற்றை இயற்றிவர்தான் இவர். இந்த ஔவைபாட்டி சங்க கால ஔவை அல்ல. ஔவையின் நல்வழியானது 40 வெண்பாக்களும், கடவுள் வாழ்த்தும் ஆக, மொத்தம் 41 வெண்பாக்களைக் கொண்டுள்ளது எளிய சொற்களால் அரிய கருத்துகளைக் கூறும் நல்வழி,

பசி என்று வந்து விட்டால்,

“சேவித்தும் சென்றிரந்துந் தெண்ணீர்க் கடல்கடந்தும்

பாவித்தும் பாரண்டும் பாட்டிசைத்தும் - போவிப்பம்

பாழின் உடம்பை வயிற்றின் கொடுமையால்

நாழி அரிசிக்கே நாம்”

பிறரைச் சேவித்தும், பலரிடம் சென்றிரந்தும், தெளிந்த நீரையுடைய கடலைக் கடந்தும், பிறரை பெரியோராக எண்ணியும், இவரைப் புகழ்ந்து பாட்டிசைத்தும் நாழி அரிசிக்கு இரந்து நிற்கின்றோம் (Venkataswamy, 2010). ஏனெனில் பசி என்று வந்து விட்டால் பிறரிடம் இரக்கத்தான் வேண்டியிருக்கிறது. இது இரந்து நிற்பவர்க்கான அறம் எனக் கூறுகிறார். ஆனால் அதேநேரம்,

தம்மிடம் வந்து இரந்து நிற்பவர்களிடம் ஈய மறுப்போரை,

“இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர்”

என்று சாடுகிறார் (Venkataswamy, 2010). எனில் ஈவது என்பது பொருள் வைத்திருப்போருக்கான அறமாகும். எனவே பொருளில்லாத ஏழைகள் இரப்பதும், பொருளுடையோர் ஈவதும் இரண்டுமே அறங்கள் தான்.

## குறுந்தொகையில் அற மாறுபாடுகள்

பதினெண்மேற்கணக்கு நூல்களுள் அகம் பற்றிப் பாடும் குறுந்தொகை, அகநானூறு, நற்றிணை, ஐங்குறுநூறு, கலித்தொகை, புறம் பாடும் புறநானூறு, பதிற்றுப்பத்து, அகமும் புறமும் கலந்து வரும் பரிபாடல் என்னும் எட்டும் தொகுக்கப்பட்டு, எட்டுத்தொகை நூல்கள் ஆனது. இவற்றில் தமிழரின் அகவாழ்வியலில் வரும் தலைவன், தலைவி, தோழி, செவிலித்தாய், தாய் எனபோரின் கூற்றுகளாகவே பாடல்கள் அமைக்கப்பட்டிருக்கும். தோழி கூறும் கருத்துகள் அவளைப் பொருத்தமட்டில், அவளுக்கென்று ஓர் அறத்தையும், தலைவி பாடும் போது அவளுக்கென்று ஓர் அறத்தையும், ஆய் அவளுடைய அறத்தையும் கூறுவார்கள். இவை அவரவர் நோக்கில் சரியாக இருக்கும் பட்சத்தில், அறங்களும் மாறுபட்டு நிற்கின்றன. எடுத்துக்காட்டாக. குறிந்தோகையில் 12ம் பாடலாக வரும் ஓதலாந்தையார் இயற்றிய பாடலில், தலைவி தோழியிடம் கூறுமிடத்து...

“எறும்பி அளையின் குறும்பல சுனைய

உலைக்கல் அன்ன பாறை ஏறிக்

கோடுவில் எயினர் பகழி மாய்க்கும்

கவலைத்து என்ப, அவர் சென்ற ஆறே

அதுமற்று அவலம் கொள்ளாது,

நொதுமல் கழறும் இவ் அழுங்கல் ஊரே”

அதாவது “என் தலைவன் சென்ற பாலை நிலத்தில் எறும்பு அளைகள் போன்ற சிறிய பல சுனைகளையுடைய, பாறைகளின் மேலாக ஏறி, வளைந்த வில்லினைக் கொண்டவரான எயினர்

அம்புகளைக் கூர்மைப்படுத்தும் கொல்லன் உலை போல சுடும் பாதைகள் ஆகியன எல்லாம் உண்டாம். இத்தகைய அச்சுறுத்தும் பாதை பற்றி கவலையுறாது, விட்டுச் சென்ற என் தலைவனைப் பழிக்கிறது இவ்வூர்" என்கிறாள். அதாவது விட்டுச் சென்ற தலைவனைத் தூற்றிது, இவளுக்காக பரிந்து பேசும் ஊரினையே தூற்றுகிறான், இது தலைவியின் அறம் (Venkataswamy, 2010).

அதேநேரம் இன்னுமொரு குறுந்தொகை பாடலான பெரும்பதுமனார் என்னும் புலவர் இயற்றிய 7வது பாடலில், தலைவினும், தலைவியும் தாயர் அறியாது உடன்போகையில், அவர்களை இடைவெளியில் கண்ட ஊர்மக்களோ, "இத்தகு கடும் பாதையில் செல்பவர்களைக் கண்டு இரக்கம் கொள்கின்றனர். பெருங்காற்று வீசுவதனால், வாகை மரங்களின் விதைக்கூடுகள் நடுங்கி ஒலிக்கும், இந்த மூங்கில் மரங்கள் நிறைந்த இந்த பாலைநிலப்பரப்பை, இந்த இளம் மக்கள் கடந்து செல்கின்றனரே," (பாடல் 7) என்று செவிலித்தாயிடம் இரங்குகின்றனராம், இது ஊர்மக்களின் அறம் (Parimelzhagar, 2012). இப்படி ஒருவருக்கொருவர் அறக்கோட்பாடுகள் குறுந்தொகைப் பாடல்களிலும் மாறுபடுகின்றன.

## புறம் பாடும் புறநானூறில் மாறுபடும் அறம்

புறம் என்பது அரசர்கள், வீரர்கள் இவர்களின் புகழினைப் பாடுவதாகவே இயற்றப்பட்டிருக்கின்றன. ஓர் உயிரினைக் கொல்லுதல் அறமன்று. அதனை எவரும் புகழ்ந்து பாடுவதில்லை. ஆனால் அரசனானவன் தன் நாட்டு மக்களைக் காத்திட, பிற நாட்டு மக்களைக் கொன்றழித்தல் அறமாக்கப்பட்டது. அதனைப் புலவர்கள் தம் பாடல்களில் புகழ்ந்தனர். புறநானூற்றில் 40ம் பாடலில் ஆவூர் மூலங்கிழார் என்பவர் சோழர்குலத் தோன்றல் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளி வளவன் என்பவனைப் புகழ்ந்து பாடுகிறார்.

"நீயே, பிறர் ஓம்புறு மறமன் னெயில்

ஓம்பாது கடந்தட்டு, அவர்

முடி புனைந்த பசும் பொன்னின்

அடி பொலியக் கழல் தைஇய

வல்லாளனை! வயவேந்தே!"

அதாவது காவல் மிகுந்த நின் பகைவனின் அரண்களை எதிர்நின்று அழித்தனை: மேலும் அம்மன்னனையுங் கொன்று, அவர் மகுடத்துப் பொன்னால் வீரக்கழல் செய்து அணிந்தனை. அத்துணை வலிமை உடைய வேந்தனே! என்று புகழ்கிறார். மன்னனாக உள்ள போது செய்யும் செயல்களை அறமாகவே பார்க்கப்படுகின்றன. புகழப்படுகின்றன. ஆனால் அதுவே தனியொருவனாகவோ, ஓர் இனத்தவரோ செய்யும் போது அவை அறமற்ற செயலாகவோ பார்க்கப்படுகின்றன. இவ்வாறு தமிழரின் புற வாழ்விலும் மனிதர்க்கு மனிதர் அறம் மாறுபடுகின்றன (Parimelzhagar, 2012).

## 'இரட்டைக் காப்பியங்களில்' அற மாறுபாடுகள்

தமிழன்னைக்கு அணி செய்யும் வகையில் ஐம்பெருங்காப்பியங்கள், ஐஞ்சிறுகாப்பியங்கள் படைக்கப்பட்டன. அவற்றுள் பல இன்று நமக்கு கிட்டவில்லை. சிலப்பதிகாரம் மற்றும் மணிமேகலை இவையிரண்டும் முழுமையாக கிடைத்துள்ளன. முன்னது சமணத்தின் பெருமைதனைக் கூறுகின்றது. பின்னதோ புத்தமதத்தின் பெருமை பேசுகின்றது. சிலப்பதிகாரத்தில், கணிகையர் குலத்தில் தோன்றிய மாதவி ஆடல், பாடலில் தலை சிறந்தவளாகத் திகழ்கிறாள். கோவலனைக் கண்ட பின், தான் அவனுக்கு மாத்திரமே உரியவள் என்று எண்ணி வாழ்ந்து வருகிறாள். கணிகையர் குல அறத்தின் படி, இது தவறல்ல என்ற போதும் உலக மரபின் படி இது அறமற்ற செயல். கண்ணகி என்னும் ஏதும் அறியா ஒரு பெண்ணின் வாழ்வினை மாதவி வாழ முற்படுகிறாள். எனில் இங்கு கண்ணகி மற்றும் மாதவி இவர்களுக்கான அறங்கள் மாறுபடுகின்றன.

எனினும் சிலப்பதிகார இறுதியில், எளியதோர் இல்லறப் பெண்ணான கண்ணகி, கணவன் இறக்கவும், மிகுந்த சினங்கொண்டும் ஓர் ஊரினையே அழித்து விடுகிறாள். ஆனால் அதேநேரம் மாதவியோ, கோவலன் இறக்கவும், தானும் மொட்டையிட்டு. தங்களுக்கு பிறந்த மணிமேகலையை புத்தமதத்தில் இணைத்து விடுகிறாள். அதனால் இவ்வுலகிற்கேஅமுது அளிக்கும் அட்சயபாத்திரம் நல்கிய ஓர் தவப்புதல்வியை அளிக்கிறாள் மாதவி. இங்ஙனம் இவர்களி இருவரின் செயல்கள் வேறு வேறாக இருந்த போதும், இருவருக்கான அறங்கள் மாறுபட்ட போதும், இருவருமே இன்றுவரை மக்களால் போற்றப்படுகின்றனர்.

## சிற்றிலக்கியங்களில் அற மாறுபாடுகள்

தமிழிலக்கியங்களில், சங்க இலக்கியங்கள் எத்துணை அழகோ அதே போன்று அழகியலும், இனிமையும் கொண்டது சிற்றிலக்கியம் என்னும் வகை. சிற்றிலக்கியம் என்னும் பெயர் பெற்றதன் காரணம் காப்பியங்களை ஒப்பிடும் போது, அளவில் சிறியன என்பதனால் இருக்க வேண்டும். ஆனால் படைப்பின் தன்மையில் அவை காப்பியங்களுக்கு இணையாகவே படைக்கப்பட்டிருக்கின்றன.

“பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாக்

தொண்ணூற்றாறு என்னும் தொகையதாம்”

என்று பிரபந்த மரபியல் கூறுகிறது. சில பாட்டியல் நூல்களும் சிற்றிலக்கிய வகைகளை 96 என்று வகைப்படுத்துகிறது. ஆனால் சில பாட்டியல் நூல்கள் எண்ணிக்கையில் மாறுபடுகின்றன. தற்காலத்தே தோன்றியிருக்கும் இவ்வகை இலக்கியங்களைக் காணும் போது எ96 எண்ணிக்கைக்குள் இவை அடங்காது என்பதை திட்டம் (Venkataswamy, 2010).

### உலா - சிற்றிலக்கிய வகையில்

உலா என்பது சிற்றிலக்கிய வகைகளுள் ஒன்று. அதாவது ஓர் அரசனைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு, அந்த அரசன் நகர வீதிகளின் வழியே உலா வரும் போது, ஊரிலுள்ள பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் ஆகிய ஏழு பருவ பெண்களும் அந்த அசனின் அழகில் மயங்கி, அவன் மேல் காதல் கொண்டு பாடும் நூல் உலா இலக்கியம் ஆகும்.

இந்நூலில் பெண்களுக்கான பண்புகளில் ஒன்றான நாணம் என்னும் பண்பு நீங்கி, பேரிளம் பெண் உட்பட வீதியில், அரசனைக் கண்டு அவன் அழகில் தாம் மயங்கி விட்டதை வெளிப்பட உரைத்தல் இல்லது, வெளிப்பட காண்பித்தல் என்பது இயல்பன்று. ஆனால் அரசனின் புகழை உயர்த்துதல் வேண்டி, பெண்களின் இயல்பை மாற்றியமைத்தல் உலா இலக்கிய வகைக்கு ஏற்றதாகும். இங்ஙனம் உலா இலக்கிய வகையில் பெண்களுக்கான அறம் மாறுபடுகிறது.

### தூது சிற்றிலக்கிய வகையில்

தூது என்பதும் சிற்றிலக்கிய வகையில் இன்னுமொரு வகையாகும். அதாவது தம்முடைய கருத்தை இன்னொருவர் அறியுமாறு, இடையில் ஒருவரிடம் கூறி, அவர் தூதாகச் சென்று, அந்த இன்னொருவரிடம் தெரிவிப்பது தூது ஆகும். அரசர்கள் போர் மற்றும் பொருள் காரணங்களுக்கு அனுப்பும் தூது புறத்தூது எனப்படும். தலைவனும், தலைவியும் காதலுக்காக அனுப்படும் தூது அகத்தூது எனப்படும். இத்தகைய தூதாக இருப்பவர்கள் சங்க இலக்கியங்களில் வாயில்கள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இறைவனான சிவனின் மேல் காதல் கொண்ட பெண்ணொருத்தி தமிழையை தூதாக அனுப்புகிறாள். உயர்திணை, அஃறிணை என்னும் இருதிணைகளும் தூதாகச் செல்லலாம் என்ற போதும் ஒரு மொழியைத் தூதாக அனுப்புதல் என்பது சற்று விந்தைதான். அதற்கு அவள் கூறும் காரணம், சிவனிடம் தூதாகச் செல்லத் தமிழுக்கு மாத்திரமே தகுதி இருக்கிறது என்கிறாள். தன் எண்ணவொட்டம்

முழுவதையும் கூற தமிழ்மொழியால் தான் முடியும் என்று எண்ணுகிறாள். இங்ஙனம் பக்தி மேற்கொண்டு தந்தையாக வணங்க வேண்டிய இறைவனிடமே ஒரு மொழியைத் தூதாக அனுப்பித் தன் காதலை உரைப்பது என்பது சற்று மாறுபட்ட அறமே. இங்ஙனம் சிற்றிலக்கியங்களில் மாறுபட்ட அறங்கள் பாடப்பட்டு இருக்கின்றன.

## சமய இலக்கியங்களில் காணப்படும் அற மாறுபாடுகள்

தமிழ் இலக்கிய வகைகள் குறிப்பிடத்தக்கவை சமய இலக்கியங்கள் ஆகும். இறைவனைத் தலைவனாக, தந்தையாக, தாயாக, தோழனாக என எண்ணி, வழிபட்டு அடியார்கள் படைத்த நூல்களே சமய இலக்கியங்கள் ஆகும். அவற்றுள் அறுபத்து மூன்று நாயன்மார்கள் இயற்றிய பன்னிரு திருமுறைகளும், மாணிக்க வாசகரின் திருவாசகமும், சேக்கிழாரின் பெரிய புராணமும், பன்னிரு ஆழ்வார்களின் நாலாயிர திவ்விய பிரபந்தமும், கிறித்துவ இலக்கியங்களும், இஸ்லாம் புகழ் பாடும் இலக்கியங்களும் இறைவனுக்கு மட்டுமல்ல தமிழுக்கும் அணி செய்தன.

இறைவனைப் பாடும் இவ்வகை இலக்கியல்கள் தம்முடைய பாட்டுடைத் தலைவனான இறைவனைப் போற்றுதலுடன், சில நேரங்களில் பிற சமயங்களின் இறைவனை தமது இறைவனை விட தாழ்த்துதலும் செய்கின்றன. இறைவனை அடைதல் என்பது பிறப்பொக்கும் எவ்வயிர்க்கும் இயல்பானது. உலகிலுள்ள எல்லா உயிர்களிடத்தும் இருப்பது ஓர் இறைவனே என்ற மெய்யான கோட்பாடு மறக்கப்பட்டு தம்தம் இறைவனே பெரியவன் என்னும் கோட்பாடு சில நூல்களில் காணப்படுவதும் அறத்தின் மாறுபாடுகள்தான்.

## தற்கால இலக்கியங்களில் அற மாறுபாடுகள்

தமிழ் இலக்கியம் எங்கும் தொய்வுபடாமல் வளர்ந்து கொண்டே இருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டு தற்கால இலக்கியம் ஆகும். தற்கால இலக்கியங்களில் நீண்ட கதைகள், கட்டுரைகள், புதினங்கள், கவிதை, குறுங்கவிதை, நாடகம், சிறுகதைகள் எனத் தொடங்கி ஒரு பக்கக் கதை என்னும் பல வகைகள் உள்ளன. சங்க இலக்கியங்களிலேயே அறத்தில் சில மாறுபாடுகள் உள்ளன என்னும் போது இக்கால இலக்கியங்களிலும் மாறுபட்ட அறங்கள் மிகுந்தே காணப்படுகின்றன. சாதி என்னும் தீயின் கொடுமைகளை விளக்கிக் கூறும் நூல்களுக்கு இடையில், சாதிப் பெருமையினைத் தூக்கிப் பிடிக்கும் இலக்கியப் படைப்புகளும் வந்து கொண்டுதான் இருக்கின்றன. அவரவர் அறம் அவரவர்க்கு என்பதற்கேற்ப எழுத்தாளர்களும் தமக்கேற்ற வகையில் அற மாறுபாடுகளைக் கொண்டுள்ளனர்.

## முடிவுரை

அறம் என்பது மனத்துக்கண் மாசிலன் ஆதல் என்கிறது குறள். மனதில் குற்றமற்று வாழ்தல் என்பது மனிதர்க்கான பொதுவான அறம். அதனையும் அடுத்து வாழ்வில் ஒவ்வொருவரும் வாழும் வாழ்வில் அவர்களின் வேலை, பதவி, பட்டம் என்பதற்கேற்ப பல அறங்கள் உண்டு. இவை சில நேரம் உலகின் பொதுவான அறக்கோட்பாடுகளினின்று மாறுபட்டு இருக்கும். ஆனாலும் அவைகளும் உலகத்தாரால் ஏற்றுக் கொள்ளப்பட்டவையே. இத்தகைய மாறுபாடுகளை நமது தமிழில் இருக்கும் தொன்மையான இலக்கியங்கள் முதல் தற்கால இலக்கியங்கள் வரை பலவகைகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன. தமிழர்களின் வாழ்வியல் முறைகளை நமக்கு எடுத்துக்கூறும் பல வழிமுறைகளில் இலக்கியங்களும் பங்காற்றி வருகின்றன. மாறுபட்ட அறங்கள் எனினும் அவைகளும் அறங்கள்தான்.

## References

Bharathiyar, (2005) Bharathiyar Padakal, Pomphugar Pathippagam, Chennai, India.

Parimelzhagar, (2012) Thirukkural, Thirumagal Nilaiyam, Chennai, India.

Puliyur Kesigen, (2014) Kurunthogai, Paari Nilaiyam, Chennai, India.

Venkataswamy, M. (2010) Nalvali, Padmam Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License